கர்த்தர் நல்லவர்

The Lord is Good



Album 26 Song 4 | ஆல்பம் 26 பாடல் 4

Song 4 கர்த்தர் நல்லவர்

Psalm 106 – Confession of Israel’s repeated sin and rebellion contrasted with God’s persistent goodness and mercy. Ends with a prayer for salvation.

கர்த்தர் நல்லவர்
அவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தர் வல்லவர்
அவரைப் போற்றுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

சிவந்த சமுத்திரத்தை அதட்டி - அதை
வற்றிப் போகச் செய்தவரே
வெட்டாந்தரையில் நடப்பதுபோல பிதாக்களை
ஆழங்களில் நடக்கச் செய்தீரே

பகைஞனின் கைக்கு விலக்கி - பிதாக்களின்
சத்துருவின் கைக்கு விலக்கி மீட்டீர்
செங்கடலால் எதிரிகளை மூடிக்கொண்டு
ஒருவரையும் உயிரோடே வைக்கவில்லை

சீக்கிரமாய் உமது கிரியைகளை மறந்து
உமது ஆலோசனைக்கு காத்திராமல்

வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி- உம்மை
அவாந்தர வெளியிலே பரீட்சை பார்த்தார்கள்

பிதாக்கள் கேட்டதைக் கொடுத்தீர்- அவர்கள்
ஆத்துமாக்களில் இளைப்பை அருளினீர்
பகலிலே மேகஸ்தம்பமாகவும்
இரவிலே அக்கினியால் வழிகாட்டினீர்

பிதாக்கள் பொறாமை பட்டனர்
மோசே ஆரோனின் மேலே
பூமி பிளந்து தாத்தானை விழுங்கி
அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது

பாவம் செய்த பிதாக்களின் கூட்டத்தில்
அக்கினி பற்றி எரிந்தது
அக்கினி ஜூவாலையால் துன்மார்க்கரை
எரிச்சல் அடைந்து எரிந்துப் போட்டீரே

ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி
வார்ப்பித்த விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்
தங்கள் மகிமையை புல்லைத் தின்கிற
மாட்டின் சாயலாக மாற்றினார்கள்
இரட்சிப்பின் தேவனை மறந்து போனார்கள்

திறப்பின் வாசலில் நின்றான் - மோசே
கர்த்தரின் உக்கிரத்தை ஆற்றினான்
உமது சத்தத்திற்கு செவிகொடா பிதாக்களுக்கு
விரோதமாய் உமது கையை எடுத்தீர்

பாகல்பேயோரை சேவித்து
அவற்றின் பலிகளைப் புசித்தனர்
தங்கள் கிரியைகளினால் கோபம் மூட்டினர்
கர்த்தருக்கெதிராய் முறுமுறுத்தனர்

கர்த்தர் வாதைகளை அனுப்பினார்
பிதாக்கள் நோய்களினால் மடிந்தனர்
பினகாஸ் எழுந்துநின்று நியாயஞ்செய்தான்
அதினால் வாதைகளை நிறுத்தினீர்

பல ஜனங்களோடே பிதாக்கள் கலந்து
விக்கிரகங்களை சேவித்து வாழ்ந்தனர்
அவைகள் அவர்களுக்கு கண்ணியாயிற்று
பிசாசுகளுக்கு பிள்ளைகளை பலியிட்டனர்

குற்றமில்லாத இரத்தத்தை சிந்தினார்கள்
தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது
கர்த்தரின் கோபம் ஜனத்தின்மேல் மூண்டது
உமது சுதந்தரத்தை அருவருத்தீர்

புற ஜாதிகளின் கையிலே ஒப்புகொடுத்தீர்
பகைஞர்கள் பிதாக்களை ஆள அனுமதித்தீர்
அநேகந்தரம் பிதாக்களை விடுவித்தீர்
தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்பட்டனர்

பிதாக்களின் கூப்பிடுதலை கேட்ட போது
அவர்களின் கஷ்டத்தை நீர் கண்ணோக்கினீர்
உமது உடன்படிக்கையை நினைத்து
உமது கிருபையின்படி மனமிரங்கினீர்

நியாயத்தைக் கைக்கொள்ளும் மனிதா
நீதிசெய்யும் நீயே பாக்கியவான்
கர்த்தர் தெரிந்து கொண்டவனின்
நன்மையை நான் கண்டு மகிழ்ந்திடுவேன்

எங்கள் பிதாக்களோடுங்கூட
நாங்களும் சேர்ந்து பாவம் செய்தோம்
நீர் தரும் கிருபையின் படியே எங்களை
இரட்சிப்பினால் சந்தித்தருளும்

உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி
உம்மை துதிக்கிறதில் மேன்மை பாராட்டிடுவோம்
எங்களை இரட்சிக்கும் இயேசு கிறிஸ்த்துவே



எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்

கர்த்தர் நல்லவர்
அவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தர் வல்லவர்
அவரைப் போற்றுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது


חֳסָּד וָרחֶמֶים